29th August 1961]

SRI K. VINAYAKAM : May I know whether by-elections, if vacancies occur in village panchayats, would be ordered so as to enable such candidates to contest the elections for the panchayat union councils?

THE HON. SRI C. SUBRAMANIAM : That will have to be governed by the provisions of the Act and just now the Madras Panchayats Act does not apply to these areas. As soon as the legislation is passed, if there is provision, I suppose, all necessary action would be taken.

SRI M. KALYANASUNDARAM : அந்த இடத்தில் நமது ராஜ்ய பஞ்சாயத்து சட்டம் அமல் நடத்தப்படவில்லை. அங்கு எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால் பஞ்சாயத்துக்கள் எல்லாம் அமைத்து, அதன் பின்னால் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் அமைக்கப்பட்டுவிடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இப்போது இல்லை. என்னுடைய ஞாபகத்தில், அங்கு அவர்களுடைய பஞ்சாயத்து சட்டப்படி பிளாக் ஏரியாக்களில் சில பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தை நம்முடைய சட்டத்தின்கீழ் கொண்டு வந்து மாறுதல் செய்யப்பட்டாக வேண்டும்.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இருக்கின்ற பஞ்சாயத்துக்கள் தங்களுடைய எல்லையை பிரித்துதர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றன. அதன்பிரகாரம் பிரித்து அதன் பின்னால் பஞ்சாயத்து யூனியன் எலெக்ஷன் நடத்துவதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது திட்டமிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது திருத்தணி தாலூகாவைப்பற்றியது.

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

School fees

* 1464 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் பள்ளிகளில் சம்பளக் கமிஷன் சிபாரிசுபடி ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதற்காக மாணவர்களின் பள்ளிக்கூட சம்பளத்தை உயர்த்தப்பட்டதா? காரணமென்ன?

(இ) சர்க்கார் நடத்தும் பாடசாலைகளிலும் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசமுண்டா?

(உ) எந்த அளவுக்கு உயர்த்த உத்தேசம்?

[29th August 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. Some managements of Secondary Schools are reported to have raised the tuition fees with a view to implement the revised scales of pay.

(*b*) No, Sir.

(*c*) This does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்படி தனியார் நடத்தக்கூடிய சில பாடசாலைகளில் சம்பள உயர்வு செய்ததின் காரணமாக பல ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்கு தெரியுமா? இவ்விதம் வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே மாதிரியாக சம்பள விகிதம் இருக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களில் சம்பளம் அதிகமாக இல்லாவிட்டாலும், பல பள்ளிக்கூடங்கள் ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்றன. இது தவிர கணக்கில்லாமல் தனியார் பள்ளிக்கூடங்களில் சம்பளத்தை உயர்த்திவிட முடியாது. இதை அனுசரித்துத்தான் ஏழை குழந்தைகள் இலவசமாக படிக்கலாம் என்று அரசாங்கம் திட்டம் கொண்டுவந்திருக்கிறது.

Legislature Proceedings (Publication of)

* 1465 *Q*.—**SRI S. LAZAR** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have been approached by the Press seeking unqualified freedom in the matter of publication of the proceedings of the Madras Legislature; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI R. SRINIVASA IYER : இந்த சட்டசபை நடவடிக்கைகளைப் பிரசுரம் செய்வதிலே பிரசுரகர்த்தாக்களுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டுமென்று செண்ட்ரல் கவர்ன்மெண்டில் ஒரு சட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே ஸ்டேட்டிலேயும் போடவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்டேட்டில் அந்த மாதிரி ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது அவசியமில்லை என்பது எனது கருத்து. இங்கு நடக்கும் நடவடிக்கைகளை வெளியில் பிரசுரித்தால் சட்டத்திற்கு விரோதமாக ஏதாவது இருந்தால் அப்போது டெஃபமேஷன் போடலாம். நம் சட்டசபையில் சட்டத்திற்கு விரோதமாக இருக்கக்கூடிய நடவடிக்கையே ஒன்றும் இல்லாததால் அதற்காக ஒரு சட்டம் போட்டு அந்த முறையில் தான் பிரசுரிக்க வேண்டுமென்று சொல்ல வேண்டிய நிலை இல்லை என்று நினைக்கிறேன்.